உங்களுக்கு ஏதாவது ஒரு
காரியம் வேண்டுமாயின்,
நீங்கள் அதைப்
பெற்றுக்கொள்ளும்
வரையில் உங்களால்
இளைப்பாற முடியாது



## வில்லியம் மரியன் பிரன்ஹாம்

## செய்தி: ஜீவனுள்ள தேவனின் தவறாத உண்மைகள்
## 60-06-26

**60** நசரேயனாகிய இயேசுவின் நாட்களில், அவர் பூமியின் மேல் இங்கே மாம்சத்தில் நடக்கும்போது, தன்னுடைய நாளில் இருந்த ஜனங்கள் தங்களுக்கு விடுதலையைக் கொண்டுவரும் ஒரு மார்க்கத்தைத் தேடிக் கொண்டிருந்ததை அவர் கண்டறிந்தார். அவர்கள்

தங்களுடைய எல்லா பொல்லாங்குகளிலிருந்தும், தங்களுடைய சத்துருக்களிலிருந்தும் அவர்களை விடுவிக்கும் ஒரு மார்க்கத்தையே விரும்பினார். அவர்கள் கேட்டுக்கொண்டதற்கான ஒவ்வொரு சவாலையும் கிறிஸ்தவ மார்க்கம் சந்தித்தது. அவர்களுக்கு தேவைப்பட்டிருந்த ஒவ்வொரு காரியத்தையும், அவர்கள் கேட்டுக் கொண்டதற்கான ஒவ்வொரு காரியத்தையும் கிறிஸ்தவ மார்க்கமானது சந்தித்தது. அது அவர்களுடைய தேவைகள் ஒவ்வொன்றிற்கும் சவாலிட்டது,

ஆனால் அவர்களோ அதை ஏற்றுக் கொள்ள மனதில்லாதிருந்தனர்.

61 அது ஏறக்குறைய இன்றைக்கும் அதேக் காரியமாய் உள்ளது. அப்பொழுது இருந்த விதமாகவே ஜனங்கள் இன்றைக்கும் இருப்பதை நாம் கண்டறிகிறோம். அவர்களுக்காக ஏதோ ஒரு காரியத்தைச் செய்யும் ஒரு மார்க்கத்தையேத் தேடுகிறாரர்கள். அவர்களுக்கு ஒரு உண்மையைக் கொண்டு வரும் ஒரு மார்க்கத்தையேத் தேடுகிறார்கள். மெய்யான, உண்மையான கிறிஸ்தவமார்க்கம்

அந்த சவால்கள் ஒவ்வொன்றையும் சந்திக்கிறது, ஆனாலும் அவர்கள் அதை ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். அவர்களுக்கு அது தேவைப்படுகிறதில்லை. இன்றைய ஜனங்களின் சுபாவம் அவ்வாறே உள்ளது. நான் மறுபடியும் பிறந்த சபையைக் குறித்துப் பேசிக் கொண்டிருக்கவில்லை. நான் தேசத்தைக் குறித்தும், நாடு முழுவதிலும் உள்ளதையேப் பேசிக்கொண்டிருக்கிறேன். அவர்களுக்கு அது தேவைப்படுகிறதாய்த் தென்படுகிறதில்லை.

62 உங்களுக்கு ஏதாவது ஒரு காரியம் வேண்டுமாயின், நீங்கள் அதைப் பெற்றுக்கொள்ளும் வரையில் உங்களால் இளைபாற முடியாது.

இயேசு, "நீதியின் மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் திருப்தியடைவார்கள்" என்று மலைப்பிரசங்கத்தில் கூறியுள்ளார்.

அவர்கள் பசிதாகமுள்ளவர்களாயிருந்தால் நலமாயிருக்குமே!

63 ஆனால் நாமோ இன்றைக்கு உண்மையாகவே

ஜனங்களுக்கு தேவைப்படுகிற ஒரு காரியத்தைக் கொடுக்க முயற்ச்சித்துக் கொண்டிருக்கிறோம், அவர்கள் அதை ஏற்றுக்கொள்ள விரும்புகிறதில்லை. அவர்களுக்கு அது தேவைப்படுகிறதில்லை. ஜனங்களுடைய மனப்பான்மை மாறியுள்ளது. அதே சமயத்தில் இன்றைக்கு உலகத்திற்கு சரியாக தேவைப்படுகிறது என்னவெனில், அவர்கள் பயந்துகொண்டும், அச்சமடைந்து கொண்டும், விடுவிக்கப்பட வேண்டுமென்றிருக்கிற காரியங்களிலிருந்து

விடுதலையளிக்கூடிய இயேசு கிறிஸ்துவின் மார்க்கமேயாகும்.

**64** அவர் இங்கே பூமியின் மேலிருந்த நாட்களில் அவர்கள் நசரேயனாகிய இயேசுவை ஏற்றுக்கொள்ள முடியாமலும், அவரை விசுவாசிக்க முடியாமலும், அவர்களுடைய விடுதலையைப் பெற்றுக்கொள்ள முடியாமலுமிருந்ததற்கான காரணங்களில் ஒன்று என்னவெனில் அது அவர்களுக்கு மிகவும் வழக்கத்திற்கு மாறானதாயிருந்தது. அது அவ்வாறேயிருந்தது... அவரோ

அவர்களுக்கு விடுதலையைக் கொண்டு வந்தார். தேவன் அவர்களுக்கு விடுதலையை அனுப்பியிருந்தார். அதுவோ அவர்களுக்கு மிகவும் வழக்கத்திற்கு மாறானதாயிருந்தது, எனவே அவர்கள் – அவர்கள் அதை ஏற்றுக்கொள்ள விரும்பவில்லை, ஏனென்றால் அது அவர்கள் வழக்கமாக ஏற்றுக்கொள்கிற மார்க்க முறையில் வரவில்லை.

